# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராய சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் சாலை சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை – 600 018. தொலைபேசி எண். 044–*2435 7590.*

**ஆணை நாள் – 24.02.2015**

**முன்னிலை**

**திரு. S.F.அக்பர், B.Sc., B.L.,**
**மாநில தகவல் ஆணையர்**

**வழக்கு எண்.57989/F/2013**

திரு. M.A.K.ஷேக்பரீத்,
எண்.14B, பாரதியார் நகர்,
பெரியபாளையம் அஞ்சல்,
ஊத்துக்கோட்டை வட்டம்,
திருவள்ளூர் மாவட்டம் – 601 102. .. மேல்முறையீட்டாளர்

பொதுத் தகவல் அலுவலர்,
செயற்பொறியாளர் (இயக்குதலும் பராமரித்தலும்),
காஞ்சிபுரம் மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
திருவள்ளூர் – 602 001.
திருவள்ளூர் மாவட்டம். .. பொது அதிகார அமைப்பு

*********

**ஆணை**

இவ்வாணையத்தால் இன்று (24.02.2015) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு.M.A.K.ஷேக்பரீத் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, திரு.M.K.பாலச்சந்திரன், பொது தகவல் அலுவலர் / உதவிப் பொறியாளர், காஞ்சிபுரம் மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், திருவள்ளூர் அவர்கள் இன்றைய விசாரணைக்கு ஆஜரானார்.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)ன் படியான தனது 17.08.2013 தேதியிட்ட மனுவில், மின் இணைப்பு சம்பந்தமாக 7 இனங்களில் தகவல்கள் கோரியுள்ளார். 05.04.2004 முதல் 17.07.2013 வரை திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், பெரியபாளையம் அருகில் உள்ள எல்லாபுரம் கிராமத்தில் சர்வே எண்.15 மற்றும் 26ல் உள்ள வீடுகளுக்கு புதிய மின் இணைப்பு கேட்டு விண்ணப்பம் செய்தவர்களின் பெயர் பட்டியல் மற்றும் இணைப்பு பெற வழங்கப்பட்டுள்ள மூல ஆவணங்களின் ஒளி நகல்கள், புதிய மின் இணைப்புக்கு பதிவு செய்யப்பட்ட பதிவேட்டின் அனைத்து பக்கங்களின் ஒளிநகல்கள் ஆகியவற்றை அளிக்கும்படி கேட்டிருக்கிறார். பொதுத் தகவல் அலுவலர், தன்னுடைய 16.09.2013 தேதியிட்ட பதிலில், மேற்சொன்ன இரண்டு சர்வே எண்களில் வீட்டு மின் இணைப்பு எதுவும் வழங்கப்படவில்லை என்ற பதிலைத் தெரிவித்திருக்கிறார்.

3. மனுதாரர் மின் இணைப்பு எண்.376–001–1137 திரு.நவாப் ஜான் பெயரிலும், 376–001–2093 திரு.மீரா ஷா பெயரிலும், 376–001–547 திருமதி.ஜானகி பெயரிலும் உள்ளதாக பொதுத் தகவல் அலுவலர் அளித்த பதிலில் தெரிவித்துள்ளதாக விசாரணையின்போது சுட்டிக்காட்டினார். மேற்சொன்ன சர்வே எண்களில்தான் (சர்வே எண்கள்.15,26) மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக மனுதாரர் சொல்கிறார். ஆனால், பொதுத் தகவல் அலுவலர், அந்த மின் இணைப்பு சர்வே எண்.22ல் வழங்கப்பட்டுள்ளது என்று சொல்லி அதற்கான ஆதாரமான V.A.O. சான்றிதழை விசாரணையின்போது ஆணையத்தின் முன் முன்னிடுகிறார்.

4. இரண்டாம் இனத்திற்கான பதில் முதல் இனத்திற்கான பதிலைப் பொறுத்தத்தாக அமைந்து இருப்பதால், மின் இணைப்பு எதுவும் வழங்கப்படவில்லை என்று பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்திருக்கிறார்.

5. மூன்றாம் இனத்தைப் பொறுத்தவரை, மின் இணைப்பு ஏதும் அளிக்கப்படவில்லை என்று சொல்லப்படுகின்ற நிலையில் பெயர் மாற்றம் நிகழ்ந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. எனவே, மூன்றாம் இனத்திற்கான பதில் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

6. நான்காம் இனத்தைப் பொறுத்தவரை, சர்வே எண்.26ல் உள்ள விவசாய மின் மோட்டார் மின் இணைப்பு திரு.நவாப் ஜான் என்பவர் பெயரில்தான் தொடர்ந்து இருந்து வருகிறது என்றும், அது ஜாமியா மசூதி என்ற பெயருக்கு மாற்றப்படவில்லை என்றும் பொதுத் தகவல் அலுவலர் தெரிவிக்கிறார். நான்காவது இனத்தில் கேட்டிருக்கின்ற கேள்விகளுக்கு சரியான பதில் தரப்பட்டிருக்கிறது.

7. ஐந்தாம் இனத்திற்குப் பதில் வழங்கப்பட்டிருக்கிறது. மின் இணைப்பு எண்களான 1137, 2093, 547 போன்ற எண்களுக்கு யார் யார் பெயரில் மின் இணைப்பு உள்ளன என்ற விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. அதே இனத்தில், மேற்சொன்ன நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மின் இணைப்புக்கு ஆதாரமாக ஆவணங்களின் நகல்களை மனுதாரர் கேட்டிருக்கிறார். பொதுத் தகவல் அலுவலர் அளித்த 16.09.2013 தேதியிட்ட பதிலில், அலுவலக இடமாற்றம் காரணமாக இன்னும் கால அவகாசம் தேவை என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் இன்றுவரை அந்தத் தகவல்கள் வழங்கப்படவில்லை. எனவே, ஐந்தாம் இனத்தைப் பொறுத்தவரை, மேற்சொன்ன 3 மின் இணைப்புகள் வழங்கப்பட்டதற்கான அடிப்படை ஆவணங்களை இந்த ஆணைக் கிடைக்கப் பெற்ற ஒரு மாத காலத்திற்குள் வழங்க வேண்டும் என்று பொது தகவல் அலுவலருக்கு இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது.

8. ஆறாம் இனத்தைப் பொறுத்தவரை, சர்வே எண்.26ல் உள்ள விவசாய மின் இணைப்பு எண்.376–001–279 என்பது திரு.நவாப் ஜான் பெயரில் இருப்பதாக பொதுத் தகவல் அலுவலர்

தன்னுடைய பதிலில் தெரிவித்திருக்கிறார். பொதுத் தகவல் அலுவலர், விசாரணையின்போது, மனுதாரர் தவறுதலாக மின் இணைப்பு எண்.1279 என்று குறிப்பிட்டுள்ளதாக தெரிவிக்கிறார். ஆக, ஆறாம் இனத்தைப் பொறுத்தும் சரியான தகவல் வழங்கப்பட்டு இருப்பது தெரிய வருகிறது.

9. இந்நிலையில், இவ்வழக்கில் மேலும் பரிசீலனை செய்ய வேண்டிய அம்சங்கள் ஏதும் இல்லை என்று கருதி இவ்வழக்கு இத்துடன் முடிக்கப்படுகிறது.

**ஒம்/– (எஸ்.எஃப். அக்பர்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.57989/F/2013</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
செயற்பொறியாளர் (இயக்குதலும் பராமரித்தலும்),
காஞ்சிபுரம் மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
திருவள்ளூர் – 602 001.
திருவள்ளூர் மாவட்டம்.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திரு. M.A.K.ஷேக்பரீத்,
எண்.14B, பாரதியார் நகர்,
பெரியபாளையம் அஞ்சல்,
ஊத்துக்கோட்டை வட்டம்,
திருவள்ளூர் மாவட்டம் – 601 102.

sg/pa/03.03